செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதிஞு (1889) ஆவணி மீ 28 உ. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அடீ] யாழ்ப்பாணம்: விரோதிகிருது ஞு மார்கழி மீ ௩0 உ வெள்ளிக்கிழமை (14-1-1972) [இல-ச0

## கூற்றுவ நாயனார்

[ சைவப் புலவர் திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை ]

பண்டைத் தமிழ் நாட்டிலே பல குறுநில மன்னர்கள் ஆட்சி புரிந்து வந்தனர். குறுநில மன்னராயினும் பெரும்புகழ் நிறுத்திய பலரை நம் பண்டைய இலக்கியங்களில் காணலாம். குடி ஓம்பிக் கோல்வழுவாது நீதி செலுத்தினோர் பலர். அவ்வகைக் குறுநில மன்னன் ஆட்சியில் விளங்கியது களந்தைப் பதி.

அக்களந்தைப் பதியைத் தலை நகராகக் கொண்டு ஆட்சி புரிந்த ஆற்றல் மிக்க அரசருள் கூற்றுவ நாயனாரும் ஒருவர். பகைவர்க்குக் கூற்றுவராய் விளங்கிய அவர் போர்க்களத்திலே அவர்களைத் தம் தோள் வலியால் புறமுதுகிட்டோடச் செய்வார். பகைவர்க்குக் கூற்றுவன் போல் இருந்தாராயினும் கூற்றுவனை உதைத்தான் குரைகழற்கே ஆரா அன்புடையவர்.

பாரிலே பகை அரசர்களைப் படை வலியால் வென்றாலும் வாழ்விலே பிறவிப் பகையை வெல்லும் நோக்கம் கொண்டவர். பிறவிப் பகையை வெல்லும் படை சூலப் படையான் திருநாமப் படையேஎன்றுணர்ந்தவர்.

உற்றுணர்ந்த நாயனன்பினரான கூற்றுவ நாயனார் நாடோறும் நம்பன் நாமம் "நமச்சிவாய" என்று ஓதுவார். சிவநாமத்தை ஓதும் சிவனடியார்களைச் சேவித்து வணங்குவார். அவர்களைத் தம் அரண்மனைக்கு அழைத்து அன்புடன் வரவேற்று உபசரிப்பார். சிவம்பெருக்கும் தவஞ் செய்து நலம் பெறுவார்.

இறைவன் அருள் தம்பால் நிறையப் பெற்ற கூற்றுவநாயனார் தம்படை வலியால் பல அரசர்களை வென்று ஆட்சியைப் பெருக்கினார். பொன்னும் பொருளும் பொலிவித்தார். யானை, குதிரை, தேர், காலாள் எனும் நால்வகைப் படையுமுடைய வீர தீர வேந்தனார்.

அரசர்களை வென்றாராயினும் அரசர்க்குரிய திருவில் முடியொன்றினை மட்டும் இல்லாதிருந்தார். இக்குறை நீங்க முடிசூடி ஆள விரும்பினார். தில்லை வாழ் அந்தணர்களை அணுகித் தமக்கு முடி சூட்டி முறை செய்யும்படி வேண்டினார்.

சோழர் குலத்தார்க்கன்றி ஏனையோர்க்குத் தாம் முடி சூட்டுவதில்லை என்று செப்பினர் தில்லைவாழ் அந்தணர்கள். முடி சூட்ட மறுத்ததுடன் நில்லாது செம்பியர் முடியினைப் பாதுகாத்து வரத் தம் குடியில் ஒருவரை நிறுத்தினர். எஞ்சியோர் சேர நாட்டினை அடைந்து உறைந்தனர்.

தமக்கு முடிசூட்ட மறுத்துத் தில்லைவாழ் அந்தணர் சேரர் நாட்டினை அடைந்ததால் கூற்றுவ நாயனார் மனந் தளர்ந்தார். எனினும் தம் மனக் கவலையை மாற்ற வல்லவர் மன்றுள் ஆடுபவரே என்றுணர்ந்தார். உணர்ந்தவர் உள்ளம் உருகி உமை மணவாளனுக்கு ஆட்பட்டுத் தொண்டாற்றினார்.

வேண்டுவார் வேண்டுவதை ஈவானாகிய சபாநாயகரிடம் "எம்பெருமானே! அடியேன் பூமியை ஆள்வதற்குரிய முடியினைச் சூட்டும்படி அந்தணர்களை வேண்டினேன். அவர்கள் மறுத்துவிட்டு அகன்றனர். இனித் தங்கள் பொன்னார் திருவடிகளையே திருமுடியாகச் சூட்டியருள வேண்டும்" என்று வேண்டுதல் செய்தார்.

அடியார்க்கெளியானாகிய சிற்றம்பலவனார் கூற்றுவ நாயனார் கருத்தை முடிக்க எண்ணினார். நித்திரை கொள்ளும் மெய்த்தவ அன்பர் சிரசிலே சிந்தனைக்கும் எட்டாச் சேவடிகளைத் திருமுடியாகச் சூட்டியருளினார். திருவடி தீட்சை பெற்ற அடியவர் விழித்தெழுந்து தம தலையிற் சூட்டிய திருவடிகளை உணர்ந்துகொண்டார்.

பொன்னார் திருவடிகள் சூட்டப்பட்ட கூற்றுவநாயனார் அவனியைச் செங்கோல் வழுவாது காத்து வந்தார். அழகிய பொன்னம்பலத்துள் ஆனந்த தாண்டவஞ் செய்யும் கூத்தப் பெருமான் கோயிலுக்குவேண்டியதிருப்பணிகள் செய்தார்.

மன்றுடையார் கோயில்கள் எங்கணுஞ் சென்று தரிசனஞ் செய்து திருப்பணிகள் பலசெய்வித்தார். ஆலயங்களில் ஞாலம் மகிழ முட்டின்றிப் பூசனைகள் முறையாக நடைபெற வழி வகுத்தார். அவ்வாற்றான் தாமும் வாழ்ந்து பிறரும் வாழ வழி வகுத்தார்.

தொண்டர்க்குத் தொண்டு செய்து உலகாண்ட, அண்டர் நாயகன் அடியவர் அவன் பணி நின்று, அரன் கழல் அடைந்தார். கூற்றுதைத்தான் பாதம் அடைந்த கூற்றுவ நாயனார் குரைகழல் வணங்கி மாற்றரும் வல்வினை அடையாதிருப்போமாக.

உ
திருச்சிற்றம்பலம்

எண்ணுகே னென்சொல்லி
எண்ணுகேனோ
எம்பெருமான் திருவடியே
எண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர்
களைகணில்லேன்
கழலடியே கைதொழுது
காணி னல்லால்
ஒண்ணுளே ஒன்பது
வாசல் வைத்தாய்
ஒக்க வடைக்கும்போ
துணர மாட்டேன்
புண்ணியா வுன்னடிக்கே
போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய
புண்ணியனே.

திருச்சிற்றம்பலம்
-திருநாவுக்கரசுசுவாமிகள்.

## கந்தசஷ்டி விரத மாண்பு

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ப் பகுதியில்
திரு. அருள் தியாகராசா அவர்கள்
(24-10-71-இல்) பேசிய சைவ நற்சிந்தனை

கலியுக வரதரும், கண்கண்ட தெய்வமுமாகிய கந்தப் பெருமானுக்குரிய விரதங்களுள் கந்தசட்டி விரதம் மிகச் சிறப்பானது. இந்த விரதத்தை ஒருவர் முறையாக நோற்றால் வேண்டியவற்றை வேண்டியாங்கெய்தலாம. கந்தவேளை நாம் முருகன், குகன், ஆறுமுகன், குமரவேள், கடம்பன், வேலாயுதன், சாமி, கார்த்திகேயன் முதலிய பல பெயர்களால் அழைக்கின்றோம்.

முருகப்பெருமான் வழிபாடு. பண்டைக் காலந் தொட்டே தமிழ் நாட்டிலிருக்கிறது. இதனைத் தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களாலும், பத்துப் பாட்டு, பரிபாடல், கலித்தொகை, குறுந்தொகை முதலிய சங்கநூல்களாலும் நாம் அன்கறியலாம். சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி முதலிய சங்கம் மருவிய நூல்களும் முருகப்பெருமானின் பெருமையை விதந்தோதுகின்றன. சைவ சமயத்தின் நிலைக்களமாக விளங்கும் தேவார திருவாசகங்களில் முருகப்பெருமானைப் பற்றிய குறிப்புக்களைப் பரக்கக்காணலாம்.

'நங்கடம்பனைப் பெற்றவள்
பங்கினன்''
''சமர சூர பன்மாவைத்
தடிந்த வேள்'
'பெற்றும் உகந்தது கந்தனையே'
''மாயச்சூர் அறுத்த மைந்தன்
தாதை'

வளர்ச்சி 2-ம் பக்கம்

## திருக்குறள் THE GREAT KURAL

### பாயிரவியல் Introduction

[யாழ்ப்பாணத்து, நல்லூர் சிவபக்தமாமணி திரு ச சூரசங்கரன் LLB (Lond) நியாயதுரந்தரர், அவர்கள் எழுதியுள்ள 'திருக்குறள உரைக்கோத்து' என்னும் நூலிலிருந்து எடுக்கப் பட்டது. —ஆசிரியர்]

அதிகாரம் I கடவுள் வாழ்த்து

குறள் (4) (முற்றேடர்—4)

வேண்டுதல் வேண்டாமை யிலானடி *சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில**

விருப்பு வெறுப்பு இல்லாத இறைவனுடைய திருவடிகளைச் சேர்ந்தார்கது எக்காலத்திலும் துன்பம் இலலை.

Those who take refuge in the Feet of god Who is without desire or aversion slall never suffer any evil.

*சேர்ந்தார், **இலர் என்பவை மணக்குடவர் யாண்டும் — எக்காலத்தும்; எவ்விடத்தும் என்றும் பொருள் கொள்ளலாம். அதற்கு இப்போது வாழும் நிலத்திலும மறுமையில அடையும் இடத்திலும் என்று பொருளகொள்வதும் தகும. மணக்குடவர் வேண்டுதல வேண்டாமை என்பதற்கு இன்பமும் வெகுளியும் எனப்பொருள்கொண்டு பொருளுங் காமமும் ஆகா என்றதற்கு வேண்டுதல் வேண்டாமை யிலான என்றுபெயரிட்டார் என்று விளக்கங் கூறுவர். (வளரும்)

## பண்ணிசை விருந்து

யாழ்ப்பாணம் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் திருப்பனந்தாள் காசி மடத்தைச்சார்ந்த திருச்சிராப்பள்ளி மௌன குரு மடத்து ஓதுவார் மூர்த்தி, தேவார இசைமணி திரு. சோ. முத்துக் கந்தசாமிதேசிகர் அவர்கள் திருமுறைப் பண்ணிசை விருந்தளிக்கவிருக்கின்றார்கள். எதிர் வரும் (18-1-72) செவ்வாய்க்கிழமை மாலை 6 மணியளவில் பண்ணிசைக் கச்சேரி ஆரம்பமாகும்.

நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் பண்ணிசை பயிலும் மாணவர்கள் இபபண்ணிசை விருந்துக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். (ந. நி.)

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

விரோதிகிருதுஞு மார்கழி மீ ௩0-௨ வெள்ளிக்கிழமை [1972]

# தைப்பொங்கற் பண்டிகையும் இறை வழிபாடும்

மனிதர்களுக்கு ஒரு வருடம் தேவர்களுக்கு ஒரு நாளாகும். தை மாதம் முதல் ஆனிமாதம் வரை சூரியன் வடக்கு நோக்கியும், ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் வரை சூரியன் தெற்கு நோக்கியும் சஞ்சரிக்கின்றான். மூன்னுறுமாத காலத்தையும் உத்தராயணம் எனவும், பின்னுறுமாத காலத்தை தெட்சணாயனம் என்றும் அழைப்பர். உத்தராயணம் தேவர்களுடைய பகற்காலம், தெட்சணாயணம் தேவர்களுடைய இராக்காலம். தை மாதப் பிறப்பிலன்று சூரியன் உத்தராயண காலத்தையாரம்பிக்கின்றான். அத்தினமே தேவருடைய பகற்கால ஆரம்பம். அன்றைய தினத்தில் சூரியோதய காலத்தில் சைவ மக்கள் சூரியபகவானுக்குப் பொங்கல் இடுவார்கள் சூரியன் பிரத்தியட்ச தெய்வம், சூரியனுடைய உதவியினால்தான் உயிர்கள் வாழுகின்றன. சூரியன் சிவபெருமானுடைய அட்ட மூர்த்தங்களிலொன்று. சூரியனை வழிபடுகின்றவர்கள் வீரம், ஞானம், ஐசுவரியம், ஆரோக்கியம் முதலிய பேறுகளைப் பெறுவார்கள்.

தைமாதப் பிறப்பிலன்று சைவ மக்கள் சூரிய பகவானுக்கு தங்கள் தங்கள் இல்லங்களின் முற்றத்தைச் சாணத்தினால் மெழுகி, புதிய அடுப்பிலே புதுப் பானையிலே பொங்கலிடுவார்கள். பொங்கலுக்குரிய அரிசியை மக்கள் தங்கள் வயல் நெல்லிலிருந்து பெறுகின்றார்கள் இப்பொங்கலினால் மக்கள் சூரியனுக்கும், பூமாதேவி இந்திரன் முதலிய தேவர்களுக்கும் தங்கள் நன்றியறிதலைத் தெரிவிக்கின்றார்கள்.

முற்காலத்தைப் போல மக்கள் கமச் செய்கையை ஒரு தெய்வப் பணியாகக் கருதுவதில்லை. புது வருடம் பிறந்தவுடன் சுப தினத்தில் வயல்வேலை செய்வார்கள். சுபதினத்தில் ஏர்ப்பூட்டுவார்கள். நெல் விதைத்தல், அருவி வெட்டுதல், சூடு மிதித்தல் முதலிய கருமங்களையெல்லாம் எருதுகள் மூலம்செய்தார்கள். இக்காலம் அக்கருமங்களெல்லாம் உழவுயந்திர மூலம் நடைபெறுகின்றன. அதனாலே பண்டைக் காலச் செய்கை முறைகள் மறைகின்றன. அவர்கள் உணவு அருந்தும்பொழுது அவ்வுணவை யளிக்கின்ற கடவுளை வணங்குவதில்லை.

தைப் பொங்கல் வழிபாடு மூலம் மக்கள் தங்களுக்கு உணவை யளிக்கின்ற இறைவனுக்கு நன்றி செலுத்தப் பழகிக்கொள்ளுகின்றார்கள். தாம் உண்ணும் உணவை சிவார்ப்பணமாக அருந்தும் பழக்கத்தைத் தைப் பொங்கல் மக்களுக்கு உண்டுபண்ணும. உணவைச் சிவார்ப்பணமாக அருந்தினால் அவ்வுணவு ஒருவனுடைய உடம்பைச் சிவ மயமாக்கத் துணை புரியும். அவன் கடவுள் பத்தியும், ஞானமும், வீரமும் பெற்று வாழ்வான்.

விளங்கு தண்டி முதலோராற் சேவிக்கப்படுவோன்
விமலன் முதனாற் சிங்கபதாசனத்தின் மேலோன்
களங்கமிலாத் தீத்தை முதற் சத்தி கணசகிதன்
கருதருண மணியொளியன் கடோற்கான்ம மூர்த்தி
துளங்கலி றன்னங்கந் தன்னங்க மெனுங் கிரகந்
தொகுமூவோதிய சூழச் சுவேதகஞ் சத்திவந்தோன்
வளங்கோள் சுவேதாமபுசத் தோட்கரனிரு நல்விழியோன்
வருசிவ சூரியன் காக்க மகிழ்ந்தடி யோங்களையே.

## குருமகாசந்நிதானம் மலையகம் வருவார்

காஞ்சிபுரம் மெய்கண்டாராதீனம் குருமகாசந்நிதானம் அவர்கள் யாழ்ப்பாணத்திலும் பிற இடங்களிலும் சமயச்சொற்பொழிவுகள் நிகழ்த்திய பின்பு 19-1-72 புதன்கிழமையன்று மலைநாட்டிலும், கீழ்மாகாணத்திலும் சமயப் பிரசாரஞ் செய்வார். சுவாமிகள் 6-1-72 தொடக்கம் 15-1-72 வரையும் புங்குடுதீவு கண்ணகையம்பாள் கோயிலென வழங்கும் ஸ்ரீ இராஜ ராசேசுவரியம்பாள் கோவிலில் சமயப்பிரசங்கங்கள் புரிவார்கள். 16-1-72 மாலை சைவ பரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நிகழவிருக்கும் மகா சிவராத்திரி விரத நிர்ணய மகாநாட்டில் கலந்து கொள்ள வருகை தருவார்கள். பின்பு ஆங்கு தங்குவார்கள்.

### புளியந்தீவு இந்துசமய அபிவிருத்திச் சங்கத்தின் வேண்டுகோள்

தமிழ்நாட்டிலிருந்துவெளிவரும் சைவசமய நூல்களையும் பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் இங்கு தொடர்ந்து பெறுதற்கு ஆவன செய்யுமாறு புளியந்தீவு இந்துசமய விருத்திச்சங்கம் ஓர் தீர்மானம் நிறைவேற்றி தபால் தந்தி மந்திரிக்கு அனுப்பி வைத்துள்ளது.

# திருமுறைகளைப்பொருள்உணர்ந்து பாடுதல் வேண்டும்

[செந்தமிழ்ச் சிரோமணி பண்டித வித்துவான் க. இ. நடராஜன் B. O. L., Dip. in Ed கோலாலம்பூர் ஸ்ரீ மகா மாரியம்மன் கோயிலில் அண்மையில் நிகழ்ந்த திருமுறை மகாநாட்டில் வழங்கிய தலைமைப் பேருரை]

(முன் வளர்ச்சி — 6)

தமிழிசை இயக்கம் என ஒன்று இன்று எழுந்திருப்பதை நீங்கள் அறிவீர்கள். தெலுங்கு முதலிய மொழிகளிற் பாடுவதைத் தவிர்த்து, கச்சேரி பண்ணுவோர் தமிழ்ப் பாடல்களையே பாடுதல் வேண்டும் என்ற இயக்கம் வளர்ந்து வருவதைத் தமிழ் நாட்டில் யாம் காண்கின்றோம். இத்தமிழிசைக்கு யாம் பெறக்கூடிய மிகப் பழைய தமிழிசைப் பாக்களாக விளங்குபவை தேவாரப் பண்கள் முதலிய திருமுறைகளேயல்லவோ? தமிழிலே படித்தாற் கேட்போர்க்குப் பொருள் புலனாகும். அஃது அவர் மனத்தை ஈர்த்து நின்று இன்புறச் செய்யும் என்பது இவ்வியக்கத்திலீடுபட்டுள்ளோர் கருத்து. இதற்குப் பொருளறிந்து பாடல்களைப் பாடுதல் எத்துணைப் பொருத்தமுடையது என்பதற்கு ஓர் உதாரணங் காட்டுதும். இசைவல்லுனர்கள் இதை அவதானித்தல் வேண்டும். ஒருமுறை ஒரு சீமந்தக் கல்யாண வீட்டுக்குப் பிரபல சங்கீத மேதை முசிரி சுப்பிரமணிய ஐயரவர்கள் கச்சேரி செய்வதற்காக அழைக்கப் பெற்றார். கச்சேரி விறுவிறுப்பாக இருந்தது. சபையிலுள்ளோர் சிலர் அவருக்கு நன்கு கைவந்த "திருவடி சரணம்" என்று தொடங்கும் காம்போதிக் கீர்த்தனையைப் பாடும்படி கேட்டுக் கொண்டார்கள். அவரும் சிந்தியாமலே அதைப் பாடத் தொடங்கிவிட்டார். "திருவடி சரணம் என்று நான் நம்பி வந்தேன் தேவாதிதேவா" என்று பாடினார். அப்பாடலின் மற்றைப் பகுதியாகிய "மறுபடியும் இந்தக் கருவடையுங்குழியில் தள்ளி வருத்தப் படுத்த வேண்டாம்" என்ற பகுதியைப் படிக்கத் தொடங்கினார். அவர் சிறிது தமிழ்த் தெரிந்தவராதலாலே அப்பகுதியைப் படித்தற்கு இது சந்தர்ப்பம் இல்லை என்பதை உணர்ந்துகொண்டார். இது சீமந்தக் கல்யாணம் நடக்கும் இடம். பிள்ளை சிறப்புற்றுச் சீராக வளர்ந்துவர வேண்டுமென்று விரும்பிச் செய்யும் இம்மங்கல விழாவில், 'மறுபடியும் இந்தக் கருவடையுங் குழியில் தள்ளி வருத்தப்படவேண்டாம்" என்று பாடுவதாயிருந்தால் அஃது எத்துணை அமங்கலமாயிருக்கும் என்பதை உணர்ந்து மேலே பாட்டைப் பாடாமல் அச்சொற்களுக்குப் பதிலாகச் சுரவரிசைகளைப் பாடிச் சமாளித்துக் கொண்டார். திருவாசகத்தில், "கடையவனேனைக் கலந்தாண்டுகொண்ட விடையவனே" என்று வருந் திருப்பாடலைக் 'கடையவனே! எனைக் கலந்து ஆண்டு கொண்ட விடையவனே" என்று பாடுவாரும் உளர். கடையவனாகிய என்னை என்று மணிவாசகப்பெருமான் பாடியிருப்ப, கடையவனே என்று இறைவனை விளித்துப் பாடுவதாயின் எவ்வாறிருக்கும்? ஆகவே, ஒல்லும் வகை பொருளறிந்து பாட யாம கற்றுக்கொளள வேண்டும்,

மற்றைய மொழிகளுக்கில்லாத ஒரு தனிச்சிறப்பு தமிழ் மொழிக்கு உண்டு. மற்றெந்த மொழியிலும இல்லாத பொருளிலக்கணம் தமிழ் மொழியில் உணடு மற்றெந்த மொழியில் இருப்பதினும் அதிகமாகப்

(வளர்ச்சி 4ஆம் பக்கம்)

# பிரார்த்தனையும் திருமுறைப்பாராயணமும்

[ஆசிரியர் திரு. செ. சின்னத்துரை, ஏழாலை, சுன்னுகம்.]

பிரார்த்தனை என்பது எரியுறுநீர் போலவும் விறகில் தீ போலவும் எள்ளுக்குள் எண்ணெய் போலவும், பாலில் நெய்போலவும் மறைந்து நின்று சர்வஉலகங்களையும் சரம் அசரமாகிய எல்லாவற்றையும் உயிருக்குயிராகி, அறிவுக்கறிவாகி இயக்குகிற எல்லாம் வல்ல இறைவனுக்கு ஒருவர் செலுத்தும் வழிபாடும்; மனம், வாக்குக் காயம் மூன்றினாலும் ஒருவர் பிரார்த்தனை செய்யலாம். ஆலய வழிபாட்டின் போது மூன்று வகை வழிபாட்டிற்கும் இடமுண்டு. மனத்தூய்மையோடும் நாம் ஒன்றும் அறியோம் என்ற தாழ்மையுள்ளத் தோடும் செய்வதே உண்மைப் பிரார்த்தனையாகும்.

உண்மைப் பிரார்த்தனை என்பது இறைவனோடு தொடர்பு கொண்டு அவரைப் பிரார்த்தித்து அவருடன் பேசுதல். "உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்" என்று நினைத்து அகத்தும் புறத்தும் எம்பெருமானைப் பூசித்து வழிபடவேண்டும்.

எமக்கும், எமது குலத்திற்கும், நாட்டிற்கும், உலகிற்குமுள்ள குறைகளையும், பிரச்சினைகளையும் எம்பெருமானுக்கு விண்ணப்பித்து சரணடைந்து அடங்கியிருக்க வேண்டும். சிலர் தங்கள் குறைகளை மாத்திரம் இறைவனுக்குக் கூறுவர். இன்னும் சிலர் தமது குலத்திற்கும் சமூகத்திற்குமுள்ள குறைகளோடு நின்று விடுவர், சுட்டுணர்வும் ஏகதேச அறிவும் கெட்டு வியாபக அறிவு மேலோங்கியும் இறைவனின் அருட் குணங்களையும் அவர் நாம் கேளாமலே எமக்கு உபகரித்துக் காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடும் தன்மையை உணர்ந்து ஞானம் கைவரப்பெறுவர் சிலர். நன்மை காட்டினதும், உலகத்தினதும் க்ஷேமத்திற்

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

# தியாகராஜ உற்சவம்

## ஓதுவார் மூர்த்தியும் கலந்துகொள்வார்கள்

வல்லூர் திருஞான சம்பந்தராதீனத்தில் 15-1-72 தொடக்கம் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் உற்சவம் விமரிசையாகநடைபெறுகின்றது. ஈழத்தின் தலைசிறந்தசங்கீத வித்துவான்கள் விழா விழாவைச் சிறப்பிக்கக்கூடிய ஒழுங்குகளை ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் கவனித்து வருகின்றார்கள். இவ் விழாவில் எதிர்வரும் 18-1-72 செவ்வாய் பிற்பகல் 4 மணி முதல் 6-30 மணி வரை தமிழகத்திலிருந்து ஈழம் வந்துள்ள, மௌனகுரு மடத்து ஓதுவார்மூர்த்தி, தேவார இசை மணி திரு. சோ. முத்துக்கந்தசாமி தேசிகரின் கச்சேரி நிகழும்,

## கந்தசஷ்டி விரத......

[1-ஆம் பக்கத்து வளர்ச்சி]

'முருக வேட்குத் தாதை காண்'
முமரன் தாதைக்குந் தேபற"
'நஞ் செந்தின்மேய வள்ளி மணாளர்க்குத் தாதை கண்டாய்"

என்று சைவத் திருமுறைகளில் வரும் அடிகள்

சிவபெருமானுக்கும், அம்பிகைக்கும், முருகப்பெருமானுக்கும் உள்ள பிரிக்கமுடியாத தன்மையை எடுத்து நவலுகின்றன.

முருகப் பெருமானின் புகழையும், பெருமையையும் விரிவாக எடுத்துக் கூறும் நூல் கந்தபுராணமாகும். இது நவில்தொறும் கவின்தொறும் நா நயம் பயப்பது. பயில்தொறும் பயில் தொறும் அறுமுகக்கடவுள் திருவடிப் பக்தி ஞானம் விளைப்பது கந்தபுராணம் முழுவதையும் கந்தசட்டி காலத்தில் எமது நாட்டில் வாழும் சைவச் சான்றோர்கள் ஓதிமுடிப்பதைத் தமது தலையாய கடமையாகக் கொண்டுள்ளனர். அதில் ஒரு சிலவற்றை எமது சிந்தனைக்கு எடுப்பாம். கந்தபுராணத்தில் வருகின்ற காசிபனுபதேசப்படலம், அறத்தின் சிறப்பை

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்)

# வீண் செயல்கள் ஏன்?

காட்சி தந்தவர்:

காஞ்சிபுரம், தொண்டைமண்டலாதீன குருமகாசந்நிதானம்

**சீலஸ்ரீ. ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்**

இடம்: வண்ணை. நாவலர் ஆச்சிரமம். 6-1-72 பிற்பகல் 3 மணி.

காட்சி கண்டவர்: கா. இரகுநாதன்,

செயலாளர், யாழ். சைவசமயஅபிவிருத்திக்கழகம், நாயன்மார்கட்டு.

(முன் வளர்ச்சி —2)

**வினா:**

3. திருவருட் சார்பினைப் பெறவிரும்பும் ஒருவன் எவ்வழியைக் கைக்கொள்ள வேண்டும்?

**விடை:**

3. திருவருளைப்பெறுதற்குச் சிவாகமங்கள் உணர்த்திய வழிகளே யன்றி வேறு வழியில்லை எவ்வழியாயினும் சிவாகம வழியை விட்டு விலகிச் செல்ல மனத்தால் நினைத்தாலும் நரகம் எய்த நேரும். ஆகம நெறியாகச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று (நான்கு நெறிகள்) அநாதியாகவேயுள்ளன. சரியை - அரும்பு கிரியை — மலர். யோகம் — காய். ஞானம் — கனி. என உருவகித்து உவமை வாக்கியத்தில் 'விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும் அரும்பு, மலர், காய், கனிபோலன்றோ பராபரமே' என்று தாயுமானவர் அருளினார். சிவஞானபோதம் (சூ 8) உரையில் சரியை, கிரியை, யோகங்களைச் செய்தால் — ஞானத்தைக் காட்டும்; ஞானம் மோட்சம் கொடுக்கும் என்னும் உபதேசம் இருக்கின்றது. அதனால் அருளைப் பெறுவதற்கு ஆண்டவன் உபதேசித்த ஆகமநெறியைவிட்டு வேறுநெறியைத் தேடுவது வீண் செயலாகும்!

**வினா:**

4. சிவ சின்னங்கள் தரித்தவர்களை - இன்று மதிக்கிறார்களில்லை — நம்மவர்களுட் பலர்; சிவப்பணி புரிபவர்களைப் பரிகாசம் செய்கின்றார்கள்; பிற மதத்தவர்கள் மதக்குமளவு, சைவ மக்கள் மன விசுவாசத்துடன் இத்தகையவர்களை மதிக்கிறார்களில்லை; எங்கள்நாட்டில் இன்று இந்நிலை பரவிவருகிறது; தமிழ் நாட்டின் நிலை யாது?

**விடை:**

4. சிவ சின்னங்கள் அகத்திலும், புறத்திலுமாக அமைய வேண்டும். புறத்தில் திருநீறும், கண்மணி மாலையும் அகத்தில் பஞ்சாட்சர செபமும் ஆகும். உருத்திராக்கம் திருவடையாளமாலை எனப்படும். சிறப்பாகச் சாதனம் என்றும் சொல்லப்படும். எவரேனும் தாம்ஆக இலாடத்திட்ட திருநீறும், சாதனமும் காணப்பெற்றால்.......... ஈசனதிறமே பேணி......தொழுவார் உளத்தில் சிவன் இருக்கின்றான்; "நாவினுக் கருங்கலம நமச்சிவாயவே" ஆகும். இத்தகைய பாடல்களைப் பாராயணம் பண்ணிப் பயன்பெற ஒவ்வொரு சைவ மகனும் தளரா நம்பிக்கையுடன் முன் வரவேண்டும். அருள்நெறியே தழைக்கும், மருள் நெறிகள் காலப்போக்கில் குன்றிவிடும்; சைவமக்கள் எங்கிருந்தாலும் தங்கள் பழமை வாய்ந்த அருள்நெறியொழுகி வர எல்லாச் சிறப்புக்களும் மிளிரும். என்பதை நாம் உணரவேண்டும்; இது இந் நாட்டுக்கும் எந் நாட்டுக்கும் பொருந்துமன்றோ?

**வினா:**

5. "இன்று நம்மத்தியில் வாழ்ந்துகொண்டிருந்து, சில அற்புதங்கள் புரிந்து வருகிற பெரியார்களை, தெய்வமாக்கி அவர்களது படங்களை வைத்துப் பூசை ஆராதனைகள் புரிந்து, சிவனுக்கு ஒப்பானவர் என்று இங்குள்ள சிலர் கொண்டாடுகிறார்கள்; அவ்வேளைகளில் சில இடங்களில் சில அற்புதங்கள் நடந்திருப்பதாகக்கூறுகிறார்கள்; சைவ மக்கள் இந்நெறிச் செல்வது முறையாகுமா......?

**விடை:**

5. சிவவேடப் பொலிவுடன் மிளிரும் உண்மைச் சிவனடியார்களையன்றி, ஏனையோரைச் சைவரென்றும், வணங்கத்தக்கவரென்றும் கொள்வது நரகத்தைச் சேர்விக்கும். சைவமக்கள் தமது நெறியில் நின்றும் வழுவார்

(வளரும்)

---

## பிரார்த்தனையும் ......

2-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

காக இறைவனோடு தொடர்புகொண்டு பிரார்த்தனை செய்வர். மாணிக்கவாசக சுவாமிகளைப்போன்ற சத்தினி பாதம் எய்திய சிலரினும் சிலர் "வேண்டத் தக்கதறிவோய்நீ — வேண்ட முழுதும் தருவோய் நீ" என்று நினைந்து அருள் வெள்ளத்தில் திளைப்பர். அத்தகையோரின் சாந்நித்தியமும் ஒளியுமே உலகை ஒருவாறு அறநெறியில் நிலைக்க வைக்கிறது.

மாயையின் குணங்களாகிய காமம், கோபம், குரோதம் லோபம்முதலிய குணங்களற்ற தெளிந்த மனநிலையோடு செய்யும் பிரார்த்தனை அளப்பரும் சக்தியும் ஆற்றலும் வாய்ந்தது. பக்தி நினைத்த காரியத்தில் வெற்றியை ஈட்டச் செய்யும். உரமுள்ள பக்தி எதனைத்தான் செய்யாது

"தனம்தரும் கல்விதரு மொருநாளுந் தளர்வறியா, மனந் தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா இனந்தரும் நல்லன எல்லாந் தருமன்பர் என்பவர்க்கே கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக கண்களே"

என்று அபிராமிப்பட்டர் கூறியுள்ளார்.

பக்தியும் அன்புமே வெரிய வலிமையுங்களவை. பிரார்த்தனையினால் உடலிலுள்ள நரம்புகள், தசைகள் எலும்புகள் முதலியன தூய்மையடைகின்றன. உள்ளத்திலுள்ள மாசு கழுவப்படுகின்றது, பிரார்த்தனையும் பக்தியின் பலனாக ஒருவரில் தூய ஒளி உதயமாகும். அது வளர்ந்து வளர்ந்து உள்ளத்தைப் பிரகாசிக்கச் செய்யும். உள்ளத்தில் கண்ணாடியைப்போல் கலந்து நிற்கும் இறைவனைக் காணும் செல்வம் வாய்க்கும். சரணாகதியோடு செய்யும் பிரார்த்தனை தனக்குள்ள பிரச்சனைகளின் முடிச்சை அவிழ்க்கும் சக்தி வாய்ந்தது இறைவன் நாமத்தை மனதில் உச்சரிப்பது அவப்பாரும் பலனைத் தரும்.

(வளரும்)

---

# வன்னியும் மந்தாரமும்

ஸ்ரீ வ. குகசர்மா

விநாயகப் பெருமானுக்கு விருப்பமான அருச்சனைக்குரிய பச்சிலைகள், அறுகு, வன்னி, மந்தாரம் என மூன்றாகும். மந்தார மரத்தடியிலும், வன்னி மரத்தடியிலும் விநாயகப் பெருமானை எழுந்தருளச் செய்து பூசைசெய்தல் மிகவும் சிறந்ததென்பர்.

வன்னியும், மந்தாரமும் விநாயகப் பெருமானுக்குச் சிறந்தவையானதற்கு ஒரு கதையை விநாயக புராணம் எடுத்துக் கூறுகிறது. புருசுண்டி முனிவர் விநாயகரை வழிபாடு செய்து சாரூப பதவியைப் பெற்றவர். சாரூபம் என்பது விநாயகப் பெருமானைப் போன்றவர். அதாவது விநாயகரைப் போலவே முகத்தில் தும்பிக்கையும், பேழை வயிறு முதலாய உருவத்தினையுடையவர்.

மந்தாரன் என்கின்ற முனிகுமாரன் சமி என்பவளை மணந்து அழைத்து வரும் வழியிலே புருசுண்டி முனிவரைக் கண்டார்கள் அவர் உருவத்தைப்பார்த்து பரிகாசமாக நகைத்தார்கள். பெரியோரைப் பார்த்து பரிகசிப்பது பிழை. எனவே முனிவர் கோபங்கொண்டார். சமியையும் மந்தாரனையும் ஒன்றுக்கும் உதவாத மரங்களாகும்படி சாபமிட்டார். அவர்கள் தவறை உணர்ந்தார்கள். முனிவரை வணங்கி சாபவிமோசனம் வேண்டினார்கள். அவரும் அவர்களுக்குப் பின்னால் நிகழப்போகும் சம்பவங்களைக் கூறிவிட்டார்.

சமியின் பெற்றோர்களும், மந்தாரனின் பெற்றோர்களும் தங்கள் மக்கள் முனிவரின் சாபத்தால் மரங்களாகியதை யறிந்து விநாயகப் பெருமானை நோக்கித் தவம் செய்தார்கள். விநாயகப்பெருமான் அவர்களுக்கு முன்தோற்றியருளினார் அவர்கள் வேண்டுகோள்படி சமிஎன்கின்ற வன்னி மரநீழலிலும், மந்தாரமர நீழலிலும் தாம் எழுந்தருளியிருப்பதாகக் கூறினார். அதனாலே வன்னிக்கும் மந்தாரத்திற்கும் தேவர்களும் போற்றும் சிறப்புக் கிடைத்தது.

"அறங்க ளாதியா நால்வகை
யருத்தம் வேண்டினரும்
மறங்கு லாவுதீ வினையினால்
வருமிடை யூறும்
பிறங்கு நோய்களு மிடும்பையும்
பெயர்க்க வேண்டுநரும்
சிறங்கு லாவுமந் நீழலில்
எமை வழி படுக"

என விநாயகர் கூறியதாக விநாயக புராணம் எடுத்தியம்பும்,

விநாயகப் பெருமான் சிவபெருமானின் ஒருஅருள் உருவமே என்பது சாஸ்திரங்களின் துணிபு,

"புவனமுற்றவர்கள் தம் இருளறுத் தவர்மனத் திடர் தவிர்த்
தருளவோர் அருளுருத் தனை
எடுத் தவதரித் துளனவன்"

என்பது கந்தபுராணம் விநாயகப் பெருமானுக்குரிய வன்னியும், மந்தாரமும் சிவபெருமானுக்கும் உரியனவாகவுள்ளதைப் பதிகங்கள் மூலம் அறிகின்றோம். வன்னியைப் பற்றி தேவாரங்கள் பலவிடங்களில் எடுத்துப் பேசுகின்றன.

"வன்னி கொன்றை
மதியொடு கூவிளம்
சென்னி வைத்த
பிரான்திரு ஆரூரை"

என்பது ஞானசம்பந்தர் தேவாரம்,

திருப்பெருந்துறையில் எழுந்தருளியுள்ள சிவபெருமானைப் புகழ்ந்து பாடுகிறார் மணிவாசகர். திருப்பெருந்துறைசோலைசூழ்ந்த இடம் என்று கூறும் மணிவாசகர் அவர் சூடியிருக்கும் மாலை 'மந்தார மாலை' எனக் குறிப்பிடுகிறார்.

செந்தார்ப் பொழில் புடைசூழ்
தென்னன் பெருந்துறையான்
மந்தார மாலையே பாடுதுங்கா
ணம்மானாய்

என்பது ஓர் திருவம்மானைப் பாடலில் உள்ள இறுதியடிகளாகும்.

மேற்போந்தவற்றால் விநாயகப் பெருமானுக்குரிய மந்தாரமும் வன்னியும் சிவபெருமானுக்குரியவை என்பதும், சிவனும் விநாயகரும் ஒருவரேயென்கின்ற உண்மையும் நன்கு தெளிவாகின்றன.

---

## விடத்தல்தீவு கற்பகப்பிள்ளையார் கோவில் மகா கும்பாபிஷேகம்

21-1-72 வெள்ளிக்கிழமை காலை 8 மணி 11நிமிடம்தொடக்கம் 9 மணி 11 நிமிடம்வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் மேற்படி கோவில் மகா கும்பாபிஷேகம் நடைபெறும்.

---

## சைவ பரிபாலனசபை வெளியீடுகள்

| | ரூபா | சதம் |
|---|---|---|
| திருச்செந்தூர்ப் புராணம் | 10 | 00 |
| தஞ்சைவாணன்கோவை | 6 | 00 |
| திருக்கேதீச்சர புராணம் | 2 | 00 |
| புலியூரந்தாதி | 2 | 00 |
| கிருட்டிணன் தூது (உரையுடன்) | 1 | 75 |
| கந்தபுராணம் — முதல் நூறு செய்யுள் (உரையுடன்) | 1 | 50 |
| திருக்குறள் (1 — 38 அதிகாரங்கள்) | 1 | 50 |
| ,, (1—20 ,, ) | 1 | 25 |
| கலைமஞ்சரி | 1 | 25 |
| செந்தமிழ்வாசக மஞ்சரி | 1 | 25 |
| நாவலர் சற்குருமணிமாலை | 1 | 00 |
| நாவலர் சமயப்பணி | 1 | 00 |
| ஆரோக்கியமும் தேகப்பயிற்சியும் | 1 | 00 |
| சுப்பிரமணிய பாரதியார் (பாடல்களின் தொகுப்பு) | | 85 |
| சைவத் திருநெறித் தோத்திரத்திரட்டு | | 75 |
| நளவெண்பா - கலி நீங்கு காண்டம் | | 75 |
| சைவசமய அறிமுகம் | | 75 |
| திருக்குறள் (25 — 34 அதிகாரங்கள்) | | 75 |
| சமயகுரவர் சந்தானகுரவர் சரித்திரச் சுருக்கம் | | 75 |
| இலக்கிய வாசகம் மூன்றம் புத்தகம் | | 65 |
| சைவபோதம் முதற் புத்தகம் | | 60 |
| ,, இரண்டாம் புத்தகம் | | 60 |
| சிதம்பர மான்மியம் | | 50 |
| வினாவெண்பா | | 50 |
| நாவலர் அஞ்சலி | | 50 |
| முருகன் பிள்ளைதமிழ் திரட்டு | | 50 |
| சிவபூசைத் திரட்டு | | 50 |
| விநாயகர் | | 40 |
| செந்தமிழ் வாசகமஞ்சரி | 1 | 25 |
| மஹாளய பட்சம் | | 25 |
| நமச்சிவாயமாலை (உரையுடன்) | | 15 |
| நன்னெறி | | 15 |
| வெற்றிவேற்கை | | 10 |
| பால கதா வாசகங்கள் (2, 3, 4ம் வகுப்புகளுக்குரியவை) | | |
| பாலபாடங்கள் | | |

மனேஜர்: **சைவப்பிரகாச அச்சியந்திரசாலை**
4[illegible]0, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

---

## அருணகிரிநாதர் விழா

—0—

அருணகிரிநாத சுவாமிகளது விழா யாழ். இசை அபிவிருத்திச்சங்கத்தின்ஆதரவில் நல்லை. ஞான சம்பந்தர் ஆதீனத்தில் 12, 13, 14-1-72 ஆகிய தினங்களில் சிறப்பாக நடைபெறவிருக்கிறது. ஈழத்தின் சிறந்தகலைஞர்களின் சொற்பொழிவு இசை நிகழ்ச்சி ஆதியன இடம்பெறும்.

---

## சிங்கள மந்திரி தமிழில் பேசினார்

அகில இலங்கைக் கிராமசபைத் தலைவர்கள் மகாநாட்டில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட திரு. பீலிக்ஸ், டயஸ். பண்டாரநாயக்கா தமிழில் உரையாற்றி சபையினருடைய பாராட்டைப் பெற்றனர். தென்னிலங்கையிலிருந்து வந்திருந்த சில கிராம சபைத் தலைவர்களும் தங்கள் உரைகளைத் தமிழ்மொழியிலாற்றினார்கள்.

## கந்தசஷ்டி விரத......

2-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

யும், நல்லொழுக்கத்தின் மாண்பையும், தவத்தின் வலிமையையும், உயிர் சிவபெருமான் திருவடியைச் சேர்தலையும் அழகாக எடுத்தியம்புகின்றது.

"தருமமே போற்றிடி னன்பு
சார்ந்திடும்
அருளெனுங் குழவியு மணையு
மாங்கவை
வருவழித் தவமெனும் மாட்சி
யெய்துமேல்
தெருளுறு மவ்வுயிர் சிவனைச்
சேருமால்"

மொழிக்கு மொழி தித்திக்கும் கந்தபுராணத்தை பல காலும் ஓத வேண்டுமென்று எங்கள் நாவலர் பெருமானும், யாழ்ப்பாணத்தின் தவமுனிவராய் விளங்கிய யோகசுவாமிகளும் சொல்லி வைத்திருக்கிறார்கள். கந்தபுராணத்தை அருளிச் செய்த கச்சியப்ப சிவாசாரியர் முருகப் பெருமானுக்குரிய இலக்கணங்களைப் பலவிடங்களில் அருளியிருக்கிறார். அவற்றுள் ஒரு செய்யுள் தோத்திரமாகவும் சாத்திரமாகவும் அமைந்திருக்கிறது.

முருகப்பெருமான் தனக்கென்று ஓர் ஊரில்லாதவன் குணங்குறிகளுக்கு அப்பாற்பட்டவன், தனக்கென்று ஒரு பெயரில்லாதவன், அதாவது பல நாமங்களினால் அழைக்கப்படுபவன் தனக்கு முன்னே, பின்னே ஒருவருமில்லாதவர். அவர் தம்வயமுடையவர். பிறிதொன்றைச் சார்ந்து நிற்பவரல்லர். அவர் பிறப்பு இறப்பு இல்லாதவர். அவர் தனக்கு ஒப்பாரும் மிக்காருமில்லாதவர் அவர் என்னுயிர்க் கடவுளாய் எனது ஆன்மாவோடு கலந்து நிற்கின்றார். இக் கருத்துக்களைக் கூறும் பாடலாவது:

"ஊரிலான் குணங்குறியிலான்
செயலிலான் உரைக்கும்
பேரிலான். ஒருமுன்னிலான்
பின்னிலான் பிறிதோர்
சாரிலான் வரல் போக்கிலான்
மேலிலான் தனக்கு
நேரிலான் உயிர்க்கடவுளா
யென்னுள்ளே நின்றான்.

கந்தஷஷ்டி காலங்களில் குகனடியார்கள் பலர் உபவாசமிருந்து திருமுருகாற்றுப்படை, கந்தர் கலிவெண்பா, கந்தரலங்காரம், கந்தரநூதி, திருவகுப்பு, திருச்செந்தூர்ப் புராணம், திருச்செந்தூர்ச் சுப்பிரமணியர் அகவல், முதலிய அருணூல்களைப் பக்திச்சிரத்தையுடன் ஓதுவார்கள். திருப்பாதிரிப் புலியூர் மடாதிபதியாக விளங்கிய ஞானியார் சுவாமிகள் என்றழைக்கப்படும் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முகமெஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் கந்தஷஷ்டிகாலத்தில் திருமுருகாற்றுப்படையை ஒவ்வொரு நாளும் 36 முறை ஓதுவது வழக்கம்

முருகனே செந்தி முதல்வனே
மாயோன்
மருகனே யீசன்மகனே —
யொருகை முகன்
தம்பியே நின்னுடைய
தண்டைக்கா லெப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

## திருமுறைகளைப் பொருள் உணர்ந்து

(2- ஆம் பக்கத்தின் வளர்ச்சி)

பக்திப் பாடல்கள் தமிழில் உண்டு என்பது ஆகவே, தமிழ் மொழிக்குள்ள இந்தப் பெருமைக்குத் திருமுறைகள் எவ்வாறு உதவுகின்றன என்று சிந்தித்துப் பாருங்கள்.

எம்திருமுறைகளைப் பிற மதப் பெரியோரும் கற்று அவற்றின் பெருமை நோக்கி அவற்றிலுள்ள கருத்துக்களையுஞ் சொற்றொடர்களையும் தாம் இயற்றும் நூல்களில் எடுத்தாளுவதைக் காண்கின்றோம். சிந்தாமணி பாடிய திருத்தக்க தேவரே தம் நூலிற் பலவிடங்களில் தேவாரங்களிலிருந்து எடுத்தமைத்த பகுதிகளை ஆராய்ச்சியாளர் எடுத்துக் காட்டியுள்ளனர். இப்பெற்றியெல்லாம் வாய்ந்த திருமுறைகளைச் சைவ மக்கள் எத்துணைப் பக்தியோடு ஓதுதல் வேண்டும். இதை உணரச் செய்யு முகத்தாலல்லவோ குருஞான சம்பந்த சுவாமிகள் 'திருமுறை ஓதாய் மனமே உனக்கென்னவாய்' என்று இடித்துக் கூறுவாராயினர்.

ஆகவே, இத்திருமுறை மகாநாட்டை ஆண்டு தோறும் தவறாமல் 12 ஆண்டுகள் சிறப்புற நடத்தி வரும் இவ்வாலயத்தின் சுயப்பகுதியினர் எம் பாராட்டுக்குரியவராவர், எம் நன்றிக்கு உரியராவர். இன்னும், இம் மாநாட்டில் பன்னிரு திருமுறைகளையும் பற்றிப் பலபெரியார் – பேரறிஞர்கள் - ஆராய்ந்து விரிவுரை நிகழ்த்த வந்திருக்கிறார்கள், அவர்களுக்கெல்லாம் என் வணக்கம் உரியதாகுக.

## அடைவு நகை ஏலவிற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம், காரைநகர் மாப்பாணவூரி திரு. செல்லையா நவரெத்தினம் அவர்களின் அடைவுகடையில் 1971ம்௵ ஜனவரி (தை) ீ 1-ம் ௨ (1—1—71) திகதிக்கு முன் வைத்த அடைவு நகைகளில் மீட்கப்படாத அடைவுகள் யாவும் 1972ம்௵ பெப்ரவரி (மாசி) மாதம் 12ம் திகதி (12-2-72) சனிக்கிழமை முற்பகல் ஒன்பதரை மணி தொடக்கம் மேற்படி அடைவு கடையில் வைத்துப் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

வி. செ, குட்டிப்பிள்ளை,
கொமிஷனர்,
Auctioneer Sales & Valuer
எம் 368 14, 21-1-72.

"இராச கிரி"
643, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல: M B 11777

1. அருளம்பலம் தியாகராசாவும் பெண்
2. மீனாட்சி இருவரும், 27½/1, நாவலர் ரோட், நல்லூர், யாழ்ப்பாணம். —வழக்காளிகள்

எதிராக

1. சொக்கலிங்கம் தர்மலிங்கம் பெண்
2. கமலாதேவி இருவரும் 79, ஆனந்தன் வடலி ரோட், அரியாலை, யாழ்ப்பாணம். —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11777-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணியை 1972ம் ஆண்டு தை மாதம் 24ம திகதி (24-1-72) திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 2996/-ம், 16-6-70 தொடக்கம் 12-3-71 வரைக்கும் ரூபாய் 2500/-க்கு 14 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 431-85

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி கொழும்புத்துறை சிவியாதெரு இறை 'துவரன்கைபுலம், வண்ணுவளவு, ஒழுங்கை வழவு' விலப்பரப்பு (4) நாலு இதற்கு எல்லை கிழக்கு ஆனந்தன்வடலி ரோட், வடக்கு கந்தையா பெண் தங்கம்மாவின் ஆதனம், மேற்கு கந்தையா தில்லையம்பலத்தின் ஆதனம், தெற்கு கந்தையா தில்லையம்பலம் கைம்பெண் பொன்னம்மாவின் ஆதனம், இதல் சொரியலாய் அரைவாசிப் பங்கும் முழு வீடும் குசுனியும் பதிவு இலக்கம் D. 349/8

2. மேற்கூறியபடி சிவியாதெரு இறை குசவன்பிட்டி (O. H. - O. R. - 7 P) 7 பேர்ச்' மத்தபன்குழத்து மேற்கு' வயல். நெல் லாச்சம் ¼ இரண்டும் சேர்ந்து ஒருபகுதியாக உள்ள 15 பரப்பு ¾ குளி முன் சொன்னபிரகாரம (சிவியாதெருவில்) இக்காணிக்கு எல்லை கிழக்கு செல்லப்பா கனகசிங்கத்தின் ஆதனம் வடக்கும் மேற்கும் தண்ணீர் ஓடும் வாய்க்கால். தெற்கு ரோட் இக்காணியில் ¾ பங்கும் கடைக் கட்டிடம் முழுவதும் பதிவு இலக்கம் 332/38

"கமலபதி"
ஆஸ்பத்திரிவீதி,
மண்டைதீவு, 8-1-72

மு. நவரத்தினராசா
கொமிசனரும், விலைமதிப்பாளரும்.
எம். 369 14—1—72

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 14—1—1972 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது,

பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழ: இல. M. B. 11655

தங்கம்மா கைம்பெண் செல்வத்துரை.
மூளாய் ஒழுங்கை, யாழ்ப்பாணம். —வழக்காளி

எதிராக

1. கனகசபை வஸ்த்தியாம்பிள்ளை
2. பெண் எலிசபெத், இருவரும் 20/1, கொய்யாத்தோட்டம், புதுரோட். யாழ்ப்பாணம், —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11655-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1972-ஆம் ஆண்டு மாசி மாதம் 11-ம் திகதி (11—2—72) வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 3412-50-ம், 2-5-70 தொடக்கம் 24-9-70 வரைக்கும் ரூபாய் 2500/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 265-20 சதம் கோட்டுச்செலவால் ரூபாய் 125/- கழிக்கப்படும், இந்த வழக்கில் ரூபாய் 1000/- கட்டப்பட்டுள்ளது:

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சுண்டிக்குளிகோவிற்பற்று சுண்டிக்குளி இறை "NUT SHELL" பர. வி. இலா. 5 குளி 16 இதில் சொல்லப்பட்ட படத்தின்படியும் 2 B அடையாளம் உள்ள பகுதியில் பர வில. இலா. 1 குளிகள் 3½ கல்லால் கட்டப்பட்ட வீடும் இதற்கெல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு றப்பியல்பிள்ளை அல்பிறட்டின் ஆதனம் மேற்கு அம்பலவாணர் அவரது மனைவிக்குமுரிய ஆதனம் தெற்கு பிலிப்புபிள்ளை கிறிஸ்தோபருக்குரிய ஆதனம் இதடங்கலும்.

ப. நா தருமலிங்கம்
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
எம். 370 14-1-71

167/1 கோவில் வீதி,
யாழ்ப்பாணம். 14-12-71

## COMMISSION SALE

## கோட்டுக்கொமிஷன் விற்பனவுவிளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் வழக்கு இல, 10587

கரவெட்டி மேற்கு வல்லிபுரம் வேலாயுதம், காலஞ்சென்ற கரவெட்டி மேற்கு வல்லிபுரம் வேலாயுதம் பெண் புவனேஸ்வரியின் தத்துவகாரன் என்ற வகையில் —வழக்காளி

எதிராக

கரவெட்டி மேற்கு, ஆறுமுகம் சுப்பிரமணியம் —எதிராளி

மேற் குறித்த வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்தகோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியு மிதன் கீழ் விபரிக்கப்படும் 1ம், 2ம் ஆதனக்கள் 1972-ம் ஆண்டு மாசி ீ 19-ந் திகதி (19-2-72) சனிக்கிழமை முற்பகல் 10-00மணி தொடக்கம் குறித்த ஆதனங்களிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

அதே திகதியில் அதே நாளில பிற்பகல் 1 மணி தொடக்கம் குறித்த ஆதனங்களிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப்பகுதி வரணிக கோவிற்பற்று,

கரம்பைக குறிச்சியிறை தண்டிகை சாத்தியவயல் செ. பர. 10 எல்லை கிழக்கு சபாபதி வல்லிபுரத்துக்கும் மறுபேருக்குமுடையவாதனம், வடக்கு உமையார் சின்னத்தம்பியினுரிமைக்காரருக்குமுடையவாதனம், மேற்கு காசிநாதர் கந்தருக்கும் கரம்பைக் குறிச்சி நிககிலிற் கந்தசுவாமி கோவிலுக்குமுரிய ஆதனங்கள், தெற்கு சந்திரசேகரக் குருக்கள் பெண் பண்ணிசைமொழியாளின் உரிமைககாரருககுமுடையவாதனம் இதடங்கலும்

2. ஷெயிறை தண்டிகைசாத்திவயல் செற். பர. 9 எல்லை கிழக்கு சபாபதி வல்லிபுரத்துககும் பங்காளருக்குமுடையவாதனம் வடககு வேதநாயகக் குருககள் பெண் சின்னப்பிள்ளைககும் மறுபேருககுமுடையவாதனம. மேற்கு வேதாரணியம் சநகிரசேகர சுவாமி கோயிலாதனம், தெற்கு உமையார் சின்னத்தம்பியினுரிமைக்காரருக்குரியவாதனம். இதடங்கலும்.

3. ஷெ வடமராட்சிப் பகுதி கட்டைவேலிக் கோயிற்பற்று கரவெட்டி வதிரிககுறிச்சியிறை 'மோறைசிட்டி' வி. பர. 26. 5/8 இதில் மேற்கரைவாசயில் கிழக்குப் புறமாக வி. பர: 3½ இல் வடக்கு புறமாக வி. பர. 2½ எல்லை கிழக்கு கறுவல் சிதம்பரப்பிள்ளைக்கும் மறுபேருககுமுடையவாதனம் வடக்கு கந்தப்பு பெண் பத்தினிககும் மறுபேருககுமுடையவாதனம், மேற்கு கனகர் பெண் பத்தினிப்பிள்ளைககும் மறுபேருககுமுடைய வாதனம், தெற்கு கணபதி பெண் சிவகாமிககும் மறுபேருக்குமுடையவாதனம். இதிற் சொரியலாய் நாலிலொரு பங்கும். இக காணிக்கு வடமேற்கு மூலையிலிருக்கும் கிணற்றிலிதற்குரிய பங்கும் வழமையான வழிவாய்க்காலுரித்தும்,

4. ஷெ யிறை கம்பராவத்தை வி. பர. 6. 5/8 இது யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 6027ம் இலக்க வழக்குத் தீர்வையின்படியும் உலாந்தா மேஸ்தர் கதிர்காமர் கணபதிப்பிள்ளையால் 0418ம இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்திற் குறிப்பிடப்பட்டுள்ள 2ம் நம்பர்த் துண்டுக்கு வி. பர. 1 குளி 9 எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு வல்லியப்பர் சுப்பிரமணியத்துக்குமுரிய குறித்த படத்திற் சொல்லிய 1ம் துண்டு நிலம், மேற்கு கனகசபை பெண் பத்தினிக்கும் மறுபேருக்குமுடையவாதனம் தெற்கு கந்தன் சின்னவனுக்கும் மறுபேருக்குமுடையவாதனம், இதடங்கலும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | துராட்சித்தொகை: | ரூபா | 3000 00 |
| 2. | ரூபா 5000/-க்கு வட்டி 21-10-50 தொடக்கம் 10-9-62 வரை 7% | ரூபா | 660 66 |
| 3. | ரூபா 3000/-க்கு வட்டி 11-?-62 தொடக்கம் 27-7-70 வரை 7% | | 1980 49 |
| 4 | ரூபா 5643-15க்கு வட்டி 22-7-70 தொடக்கம் 12-11-71 வரை 5% | ரூபா | 252 68 |
| 5. | கோட்டுச் செலவு | ரூபா | 309 99½ |
| | | | 6203 82½ |

R. S. இராமநாதன்
கொம்மிசனரும் விலைமதிப்பாளரும்
ஏல விற்பனையாளரும்
Commissioner of Sa e & Valuer
and Auctione

"உமாபதி"
துப்பளை, பருத்தித்துறை,
19-10-71
எம். 369 14—1—72